### கோவை தெற்கு மாவட்டம் - சூலூர் - பொள்ளாச்சி - கிணத்துக்கடவு - வால்பாறை

# சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகளுக்கு நன்றி!

## கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் அறிக்கை !



கோவை, ஏப். 30-

கோவை தெற்கு மாவட்டம் சூலூர், பொள்ளாச்சி கிணத்துக்கடவு, வால்பாறை சட்டமன்ற தொகுதி நிர்வாகிகளுக்கு கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் தனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் தனது அறிக்கையில் கூறியதாவது : கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் சூலூர் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளராக "உதயசூரியன்" சின்னத்தில் களத்தில் நின்ற போது, என்னுடன் உணர்வோடு பயணித்து, தொடர்ந்து பிரச்சாரம் செய்த மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் அனைத்துக் கட்சி நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும், எல்லா வகையிலும் உறுதுணையாக நின்ற கழக நிர்வாகிகளுக்கும், கழக உடன்பிறப்புகளுக்கும், ஆதரவு தெரிவித்து வாக்களித்த அனைத்து நல்வுள்ளங்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இதேபோல் பொள்ளாச்சி சட்டமன்ற தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கொங்கு நாடு தேசிய மக்கள் கட்சி சார்பில் நித்தியானந்தம் "உதயசூரியன்" சின்னத்தில், கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் சபரி கார்த்திகேயன் "உதயசூரியன்" சின்னத்தில் வால்பாறை சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் குட்டி (எ) சுதாகர் "உதயசூரியன்" சின்னத்தில் போட்டியிட்டனர்.

பொள்ளாச்சி சட்டமன்ற தொகுதி கொங்கு நாடு தேசிய மக்கள் கட்சி வேட்பாளர் நித்தி யானந்தம், கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் சபரி கார்த்திகேயன், வால்பாறை சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் குட்டி (எ) சுதாகர் ஆகியோருக்கு "உதயசூரியன்" சின்னத்தில் வாக்களிக்க உழைத்த கழக நிர்வாகிகள் அனைவருக்கும், அதேபோல் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைவருக்கும் கழக மேற்கு மண்டல பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி சார்பிலும், கோவை தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பிலும், எனது சார்பிலும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### கோவை மாநகர் மாவட்டம் கோவை தெற்கு - கோவை வடக்கு - சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதிகளில்

# தேர்தல் பணியாற்றிய கழக - கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகளுக்கு நன்றி!

## மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் அறிக்கை!



கோவை, ஏப்.30-

கோவை மாநகர் மாவட்டம், கோவை தெற்கு, கோவை வடக்கு சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதிகளில் தேர்தல் பணியாற்றிய தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகளுக்கு மாநகர் மாவட்ட கழகப் பொறுப்பாளர் துரை. செந்தமிழ்ச் செல்வன் தனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துள்ளார்.

இது குறித்து கோவை மாநகர் மாவட்ட கழகப் பொறுப்பாளர் துரை. செந்தமிழ்ச் செல்வன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :கோவை மாநகர் மாவட்டம் கோவை தெற்கு கோவை வடக்கு சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதிகளில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக்கூட்டணியின் சார்பில் கழக வேட்பாளர்களாக கோவை தெற்கு சட்டமன்ற தொகுதியில் "உதயசூரியன்" சின்னத்தில் போட்டியிட்ட கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி,

கோவை வடக்கு சட்டமன்ற தொகுதியில் "உதயசூரியன்" சின்னத்தில் போட்டியிட்ட கோவை மாநகர் மாவட்ட கழகப் பொறுப்பாளர் துரை. செந்தமிழ் செல்வன் ஆகிய எனக்கு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதியில் "கை" சின்னத்தில் போட்டியிட்ட ீ நிதி ஆகியோருக்காக கண் துஞ்சாது தேர்தல் பணி மேற் கொண்ட திராவிட முன்னேற்ற கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள்அனைவருக்கும் கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி சார்பிலும், கோவை மாநகர் மாவட்ட கழகத்தின் சார்பிலும், எனது சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் நடைபெற்ற சாதனைகளை ஒவ்வொன்றாக வீடுகள் தோறும் எடுத்துக்கூறி "உதய சூரியன்" சின்னத்திற்கும், "கை" சின்னத்திற்கும் வாக்கு சேகரித்த மாநில, மாநகர் மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புக்களின் பிரதிநிதிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், தோழர்கள் உள்ளிட்ட அனைத்து நெஞ்சங்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கோவை மாநகர் மாவட்ட கழகப் பொறுப்பாளர் துரை. செந்தமிழ் செல்வன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### சென்னை உயர்நீதிமன்றத்தில் காலியாக உள்ள நீதிபதி பணியிடங்களை

# சமூகநீதி அடிப்படையில் உடனடியாக நியமனம் செய்க!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, ஏப்.30 -

பாலினப் பிரதிநிதித்துவம் என்றாலும் அதில் சமூகநீதி அவசியம்! சென்னை உயர்நீதிமன்றத்தில் காலியாக உள்ள நீதிபதி பணியிடங்களை சமூகநீதி அடிப்படையில் உடனடியாக நியமனம் செய்க! மக்கள் மன்றத்தைப் போராட்டத்துக்குத் தள்ளக் கூடாது என்று திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

தொடக்கக் காலம் முதலே சென்னை உயர்நீதிமன்றம், இந்தியாவின் முக்கியத்துவம் வாய்ந்த மூன்று உயர்நீதிமன்றங்களில் ஒன்று (Charted High Courts).

அதன் நீதிபதிகளின் எண்ணிக்கை படிப்படியாக உயர்த்தப்பட்டு இன்று மொத்தம் அங்கீகரிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை 75 ஆக (தலைமை நீதிபதி உள்பட) இருக்கிறது.

ஆனால், தற்போது 75 இல் 23 நீதிபதி பதவிகள் (விரைவில் ஒருவர் ஓய்வு உள்பட 24 ஆகக்கூடும்) நிரப்பப்படாமல் காலியாகவே உள்ளன.

**"தாமதிக்கப்படும் நீதி மறுக்கப்படும் நீதி!"**

தேங்கியுள்ள வழக்குகளும், அன்றாடம் போடப்படும் வழக்குகளும் கூடுதலாகவே பெருகும் நிலையில், "தாமதிக்கப்படும் நீதி மறுக்கப்படும் நீதி" என்பதை அனைவரும் நன்கு அறிவர்.

சென்னை மட்டுமல்லாது, இது போன்ற பல உயர்நீதிமன்றங்களில் ஏராளமான நீதிபதி பதவிகள் நிரப்பப்படாமலேயே உள்ளன!

நமது இடைவிடாத வெகு நீண்ட கால போராட்டங்கள் காரணமாக, உச்சநீதிமன்றத்தில் சில ஆண்டுகளுக்கு முன்பு, சமூகநீதிக் கொள்கையை அதிகாரப்பூர்வமாக 'கொலிஜியம்' ஏற்று, அதன்படி காலியான உச்சநீதிமன்ற நீதிபதி பதவியில், சென்னை உயர்நீதிமன்றத்திலிருந்து பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒருவர், உச்சநீதிமன்ற நீதிபதியாகப் பதவி உயர்வு பெற்று, நியமிக்கப்பட்டு சிறப்பாகப் பணி புரிந்து வருகிறார்!

**ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தொடர்பு!**

பற்பல நேரங்களில், 'கொலிஜியம்' என்ற பதவி நியமனப் பரிந்துரைக் குழு அனுப்பிய பட்டியலைக் கூட - உடனடியாக ஒன்றிய அரசின் சட்டத் துறை மூலம் நியமிக்காது, தங்களது காவிக் கண்ணோட்டப்படி, குறிப்பிட்ட கட்சியின் ஆதரவாளரா அல்லது அதன் கார்டு ஹோல்டரா? அல்லது முன்பு அவருக்கு ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தொடர்பு உள்ளதா? என்று பார்த்து, அதன் பிறகே நியமன ஒப்புதல் தருகிறார்கள் என்பது, பரவலாகப் பேசப்படும் செய்தியாகும்.

சென்னை உயர்நீதிமன்றத்தில் 'கொலிஜியம்' என்ற நியமனக் குழுவில் 'சீனியர்' என்ற போர்வையில் பெரிதும் உயர்நீதிமன்றப் பார்ப்பன நீதிபதிகள் இடம் பெற்று, உச்சநீதிமன்றத்திற்குப் பரிந்துரை செய்கின்றனர். (மூன்று பெயர்களைக் கொண்ட கொலிஜியம்)

'சீனியாரிட்டிபடி' உயர்நீதிமன்ற கொலிஜியத்தில் இடம்பெறுபவர் பார்ப்பனரல்லாதவராக வர வாய்ப்பிருந்தாலோ அல்லது தங்கள் கண்ணோட்டத்தில் உகந்தவராக இல்லை என்று கண்டறிந்தாலோ, அவர்களை வேறு மாநிலங்களுக்குப் 'பதவி உயர்வு' மூலம் (Kicking up) தள்ளிவிட்டு விட்டு, தங்களது பார்வையில் விரும்பத்தக்கவர்களையே நிய மிக்கும் ஒரு நடைமுறை ஏற்படுகிறது.

இதற்குப் பல எடுத்துக்காட்டுகள் உள்ளன. அதை விலாவாரியாக விளக்க நாம் விரும்பவில்லை.

அதுபோக, ஒவ்வொரு முறை பட்டியலை அனுப்பும்போதும், ஒவ்வொரு உயர்ஜாதி - பார்ப்பன ஆண் அல்லது பெண் வழக்குரைஞர்களது பெயர்களைச் சேர்த்து, கொஞ்சம் கொஞ்சமாக (அலுப்பு இன்றி) தமிழ்நாட்டில் வெறும் 3, 4 சதவிகிதமே உள்ள ஒரு வகுப்பிலிருந்து, 10, 12 சதவிகிதம் பிரதிநிதித்துவமும், 80, 90 சதவிகிதம் உள்ள எஸ்.சி., எஸ்.டி., எம்.பி.சி., பி.சி., மைனாரிட்டி வகுப்புகளில் போதிய அனுபவம், வருமான வரி கட்டுவோராகவும், பல திறமைகள் இருந்தாலும், அவர்களுக்கு வாய்ப்புக் கதவு அடைபட்டே இருப்பதுதான் யதார்த்த நிலையாகும்!

அப்படி ஏதாவது ஒரு பார்ப்பனரல்லாதோரைப் பரிந்துரை செய்தால்கூட, அதிகம் வயதானவராகவும், விரைவில் அப்பதவியில் இருந்து ஓய்வு பெறத் தக்கவராகவும் பரிந்துரைக்கிறார்கள்! அதேநேரத்தில், உயர்ஜாதியிலிருந்து பரிந்துரை மூலம் நியமனம் பெறுபவர்கள் குறைந்த வயதுடையவர்களாகவும், உச்சநீதிமன்றத்திற்குச் சென்று அங்கும் உயர்நிலை பெறும் வகையிலான வாய்ப்பை உறுதி செய்யும் நோக்கத்துடனும் பரிந்துரைகளும், நியமனங்களும் 'தொலைநோக்கோடு' நடத்தப்படும் வேதனையான நிலையே வழமையாக உள்ளது!

வழக்குரைஞர் சங்கத்தவர்கள் கையெழுத்திட்ட மனு ஒன்றைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்ப முடிவெடுத்துள்ளனர். அதனைக் காலதாமதமின்றி அனுப்பவேண்டும்!

**நியமன வாய்ப்பை வழங்க வேண்டும்!**

காலியாக உள்ள 23, 24 நீதிபதி பதவிகளில் நியமனம் செய்யும்போது, நமது இந்திய அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள சமூகநீதிக்கான போதுமான பிரதிநிதித்துவம் (Adequate Representation) என்ற நியதிக்கேற்ப, வாய்ப்பற்ற பல வகுப்பினருக்கு நியமன வாய்ப்பை வழங்கவேண்டும்.

தமிழ்நாடு, சமூகநீதி மனப்பாங்குள்ள (Psychology Soil) - அதில் முன்னோடியாக நின்று போராடும் ஒரு மாநிலம் என்பதை பரிந்துரைப்போரும், நியமனம் செய்வோரும் கருத்தில் கொள்ளத் தவறக்கூடாது.

பாலின பிரதிநிதித்துவும் (Gender Justice) என்ற சாக்கில், உயர்ஜாதிப் பெண்களையே நியமனம் செய்யும் தந்திரத்தையும் மாற்றிக் கொள்ளவேண்டும்!

புதிய தலைமை நீதிபதியும், கொலிஜியமும், அதன் மேல் உள்ள உச்சநீதிமன்றக் கொலிஜியமும், அதற்கு மேல் இறுதியாக நியமனம் செய்யும் ஒன்றிய அரசின் சட்டத் துறை, குடியரசுத் தலைவர் உள்பட அனைவரும் இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி எடுத்த உறுதிமொழியிலிருந்து நழுவாமல் கடமையாற்றுவது அவசரம், அவசியம்!

**நமது முக்கிய விழைவு!**

மக்கள் மன்றத்தை நீதித் துறைக்கு எதிராகப் போராடும் நிலைக்கு அவர்கள் தள்ளிவிடக் கூடாது என்பதே நமது முக்கிய விழைவு - வேண்டுகோள் ஆகும்!

இதனை அலட்சியப்படுத்தினால் தொடர் மக்கள் கிளர்ச்சி தமிழ்நாட்டில் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### தமிழ்நாட்டின் வளர்ச்சித் திட்டங்கள்

# நம் முதல்வரின் சாதனைகளைச் சொல்லும்! மே 4 ல் வெல்வார் - புதிய வரலாறு படைப்பார்!

## நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி.ஓவியம் உறுதி!

சென்னை, ஏப். 30-



தமிழர் நெஞ்சங்களில் தவிர்க்க முடியாத தலைவராகத் திகழும் நம் முதல்வர் அவர்களின் உன்னத உழைப்பினால் தமிழ்நாட்டில் நிறைவேறியுள்ள திட்டங்கள் வரலாறு சொல்லும் மே 4 ல் வென்று காட்டுவார்! உதயசூரியன் உதிக்கும் உதிரிகள் உதிரும் என நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி. ஓவியம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்

அவரது அறிக்கை வருமாறு:

உழைப்பால் உயர்வு, பண்பான பேச்சு மக்களோடு மக்களாக திகழ்கி றார் நம் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நம் தளபதி தமிழ்நாட்டு அரசியலில் மட்டும் அல்ல, தேசிய அரசியலிலும் தனக்கென்று ஓர் இடத்தை உறுதி செய்திருக்கிறார். தமிழ் நாட்டின் கல்வி மற்றும் தொழில் வளர்ச்சியில் முன்னேற்றம் அடைந்த நம் மாநிலத்தை மற்ற மாநிலத் தலைவர்கள் அத்திட்டத்தை பின்பற்றி வருகிறார்கள். பெண்கள்,முன்னேற்றம் புத்தக வாசிப்பு அதிகரிப்பு, போன்ற பல சிறப்புகளை வியந்து பார்க்கிறார்கள். இந்த தேர்தலில் நம் தளபதி வெற்றி பெறுவதோடு மட்டும் இல்லாமல், தமிழ் நாட்டை பின்னோக்கி கொண்டு செல்லும் தவறுதலான அரசியலை நிராகரிப்போம்.

தமிழ் மக்களின் நெஞ்சங்களில் தவிர்க்க முடியாத தலைவராவார். சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்ட மண் இது, பெரியார், அண்ணா,தமிழின தலைவர் கலைஞர் பிறந்த மண். திராவிட இயக்கங்கள் கொடுத்த உரிமைகளை தமிழ் நாட்டு மக்கள் மறக்க முடியுமா? சமத்துவம் இருந்திருக்காது, மொழிப்பற்று இருந்திருக்காது, நாம் தமிழ் நாடு என்று அழைக்கும் சொல்லிற்கு சொந்தக்காரர் நம் திராவிட தலைவர்கள்.

இப்போது ஒன்றிய அரசின் அடக்கு முறையை ஒடுக்கி, மதவாத சாயம் இல்லாமல் எந்த சூழ்நிலையிலும் நம் உரிமைகளை காப்போம் என்று நம்பிக்கையை உணர்த்தி மக்களின் காவலனாக,கவசமாக, நான் உங்களுடன் என்றும் மனதில் நிற்பேன் என்று விமர்சன ங்களை அடித்து நொறுக்கினார் நம் தளபதி.

1) டங்ஸ்டன் சுரங்கம் பிரச்சனையில் நான் இருக்கும் வரை இந்த திட்டத்தை வர விட மாட்டேன் என்று குரல் கொடுத்து சொல்லி வச்சி செய்தார்.

2) திருப்பரங்குன்றம் விவகாரத்தில் நாங்கள் "விளைவுகளை சந்திப்போம்" என்று அரசாங்கத்தின் குரலாக ஒலித்தார்.

3) தொகுதி மறுவறையரை விவகாரத்தில் தளபதி கையாண்ட விதம் சிறப்பானது.

நகலை எரித்து வரலாறு படைத்தார்.

எல்லா மாவட்டத்திலும் டய்டல் பார்க், மற்றும் ஸ்மார்ட் சிட்டி அமைத்தார். எல்லா நகரங்களிலும் நவீன பேருந்து நிலையம் அமைத்து மக்கள் மனதில் பாராட்டு பெற்றார்.

மதுரையில் கலைஞர் நூலகம் பல் நோக்கு மருத்துவமனை, ஜல்லிக்கட்டு மைதானம் என்று அரசியல் நோக்கத்திற்காக போட்ட திட்டம் இல்லை. வாக்கிற்காகவும் இல்லை மக்களுக்காவும், தமிழ்நாட்டின் வளர்ச்சி திட்டமாக மட்டுமே. நம் தமிழ் மண்ணுக்கு நம் சமூகத்திற்கு தரமான தலைமுறைகள் தேவை.

மனித நேயமிக்க நம் தளபதி வெல்வார். இத்தலைவனை நம் தமிழ்நாடுபெற்ற வரம்.வெற்றி முழங்க சூரியன் உதிக்கும் உதிரிகள் உதிரட்டும்


வாழ்க திராவிடம். வாழ்க தளபதி.

இவ்வாறு திருமதி. ஓவியம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கி. சோழன்

**ஏப்ரல் 30 (2001)**



பெங்களூர் நகரில் கழகம் வளர்த்த முன்னோடிகளில் ஒருவர். கர்நாடக மாநில அமைப்பாளராக பணியாற்றியவர்.

1953ஆம் ஆண்டில் கர்நாடக மாநில தி.மு.க. முதல் மாநாடு சிறப்பாக நடைபெற்றதில் விளம்பரச் செயலாளராகப் பொறுப்பேற்று பணியாற்றியவர்.

தந்தை பெரியாரின் கொள்கையில் அழுத்தமான நம்பிக்கை கொண்டதன் விளைவாக, கலப்புத் திருமணத்தை ஏற்கின்ற வகையில் வேறு சாதியைச் சார்ந்த ஒரு கைம்பெண்ணைக் கைப்பிடித்து, அண்ணா அவர்கள் தலைமையில் சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டவர்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர். குறிப்பாக 1986ஆம் ஆண்டு தலைமைக் கழகம் அறிவித்த அரசியல் சட்ட எரிப்புப் போராட்டத்தை இவர் தலைமையேற்று வெற்றிகரமாக நடத்தினார். இதனால் காவல்துறை வழக்கு போட்டு கைது செய்து சிறையில் அடைத்தது.

1997ஆம் ஆண்டு நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில், இவருக்கு தலைவர் கலைஞர் அவர்கள் அண்ணா விருது வழங்கி சிறப்பித்தார்கள்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## பி. பொன்னுரங்கம்

**ஏப்ரல் 30 (2021)**



கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

சென்னை மேற்கு மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**